

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (28.07.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். உடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் .டி.எம்.செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.சதாசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி ஆக்ரிதி சேத்தி, சேலம் மேல் காவிரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் திரு.ராமலிங்கம், தஞ்சாவூர் கீழ்க்காவிரி வடிநில வட்டம் கண்காணிப்பு பொறியாளர் .சண்முகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# மேட்டூர் அணையில் 12 ஆயிரம் கன அடி நீர் திறப்பு!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சேலம், ஜூலை 29 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (28-07-2024) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

காவிரி நதிநீர் ஆணையம் ஏற்கனவே தமிழ்நாட்டிற்கு 45 டிஎம்சி தண்ணீர் திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் கர்நாடக மாநிலத்தால் நீர் திறக்கப்படவில்லை. எனவே முதலமைச்சர் அவர்கள் நீரை திறந்து விடுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

தற்போது காவிரி நீர் பிடிப்புப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் மேட்டூர் அணைக்கு சுமார் 1,55,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இன்று (28-7- 2024) காலை 10 மணி நிலவரப்படி மேட்டூர் அணை சுமார் 108 அடியை எட்டியது.

### கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்!

அதனைத்தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மேட்டூர் அணையில் இருந்து நீரை திறந்து விடுவது குறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதனடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்றையதினம் மேட்டூர் அணையில் இருந்து 12,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே காவிரி கரையோரத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இந்நீரைக் கொண்டு அருகில் உள்ள ஏரிகள் மற்றும் டெல்டா பகுதிகளில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரப்பப்படும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. ராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. பெ.மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி)செல்வி ஆக்ரிதி சேத்தி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.ரேவதி ராஜசேகர், சேலம் மேல் காவிரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் ராமலிங்கம், தஞ்சாவூர் கீழ்க்கா வேரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் சண்முகம், மேட்டூர் நகரமன்றத் தலைவர் திருமதி.சந்திரா, சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி ந. லோகநாயகி, மேட்டூர் அணை கோட்ட செயற்பொறியாளர் சிவகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



நிதிநிலைஅறிக்கையில்தமிழ்நாட்டைபுறக்கணித்த ஒன்றியபாசிபா.ஜ.க. அரசைக்கண்டித்துமாவட்டசெயலாளர்கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்புதுக்கோட்டையில்கண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றது. இதில்5ஆயிரம்கழகத்தினர்கலந்துகொண்டுகண்டனமுழக்கமிட்டனர். முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் கண்டன உரையாற்றினார். கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. – த.சந்திரசேகரன் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, திமுக தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் நேற்று (28.7.24) தி.நகர், தர்மாபுரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 1500 பேருக்கு மதிய உணவு வழங்கினார். வட்ட கழக செயலாளர்கள் தவமணி, விஷ்ணு, முன்னாள் வட்ட செயலாளர் வெங்கடேசன் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் உடன் இருந்தனர்.

